மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் – தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக ஒருங்கிணைந்த தலைவராகத் தேர்வான

பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லாவிற்கு வாழ்த்து!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, அக்.20 - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் வாழ்த்தி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக்கழக ஒருங்கிணைந்த தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு வாழ்த்து தெரிவித்து கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



எம்.எச்.ஜவாஹிருல்லா

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தள பதிவு வருமாறு:-

மனிதநேய மக்கள் கட்சி மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் ஒருங்கிணைந்த தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராசிரியர் அவர்களுக்கும், மனிதநேய மக்கள் கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அப்துல் சமது உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவருக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துகள்!

உரிமைகள் மறுக்கப்படும் இடங்களிலும் - அநீதிக்கு எதிரான போராட்டங்களிலும் உறுதியான குரலாகவும், மதநல்லிணக்கத்தைப் பேணுவதில் இணைப்புப் பாலமாகவும் திகழ்ந்துவரும் இரு அமைப்புகளின் மக்கள் பணி, தங்கள் அனைவரின் தலைமையிலும் வழிகாட்டுதலிலும் மேலும் வலுப் பெற்று, சமூகநீதியும் சமத்துவமும் தழைக்கும் சமுதாயத்தை உருவாக்கத் துணை நிற்கட்டும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

அலட்சியம் வெட்ட வெளிச்சமாகி உள்ளது! மழைநீர் தேங்கியது பற்றி

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் விளக்கம் தர வேண்டும்!

முக்கிய ஆவணங்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!

சென்னை, அக்.20- சென்னை மாநகராட்சியைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறையின் அலட்சியமும் வெட்ட வெளிச்சமாகியுள்ளது. தன் சொந்த அலுவலக வளாகத்திலேயே மழைநீர் தேங்கியுள்ளதற்கு ஆணையர் யாரிடம் விளக்கம் கேட்கப் போகிறார்? ஓலைச்சுவடிகள் மற்றும் அரிய ஆவணங்களின் பாதுகாப்பை உடனடியாக உறுதி செய்ய வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவரது சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில், இதை விடப் பெருமழை பெய்த காலங்களில்கூட இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலக வளாகத்தில் இவ்வாறு மழைநீர் தேங்கியதில்லை.

சென்னை மாநகராட்சி நிர்வாகம் உறக்கத்தில் இருப்பதாக மக்கள் கேள்வி எழுப்பும் நிலையில், இந்து சமய அறநிலையத்துறையும் அதே அலட்சியப் போக்கில் செயல்படுவது வெட்ட வெளிச்சமாக தெரிகிறது.

அனைத்து விவகார ங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி விளக்கம் கேட்கும் ஆணையர், தனது அலுவலக வளாகத்திலேயே மழைநீர் தேங்கியிருப்பதற்கு யாரிடம் விளக்கம் கேட்கப் போகிறார்?

கோயில்களின் நிர்வாகம், சொத்துப் பாதுகாப்பு, பழமையான ஓலைச்சுவடிகள் மற்றும் அரிய ஆவணங்களைப் பாதுகாப்பது எனப் பல முக்கியப் பொறுப்புகளைக் கொண்ட துறையின் அலுவலகத்திலேயே மழைநீர் தேங்குவது கவலைக்குரியது. நீர் உட்புகும் அபாயம் இருந்தால், நூலகங்களிலும் ஓலைச்சுவடிப் பாதுகாப்புப் பெட்டகங்களிலும் உள்ள அரிய ஆவணங்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவ தாக அறிவிப்புகள் வெளியிடப்படும் நிலையில், நடைமுறையில் இத்தகைய நிலை ஏன் ஏற்பட்டது? வடிகால் வசதிகள் முறையாகப் பராமரிக்கப்பட்டனவா? மழைநீர் தேங்குவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா?

அறிவிப்புகளும் சுற்றறிக்கைகளும் மட்டும் நிர்வாகமல்ல; களத்தில் தெரியும் செயல்பாடுகளே நிர்வாகத்தின் அளவு கோல்!

மழைநீர் தேங்கியதற்கான காரணம் என்ன, பொறுப்பான அதிகாரிகள் யார், அரிய ஆவணங்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதா என்பவை குறித்து வெளிப்படையான விளக்கம் அளிக்கப்பட வேண்டும். இனியும் இதுபோன்ற அலட்சியம் நிகழாத வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

26 ஆம் ஆண்டு நினைவு நாள்

வி. இராஜசேகரம்
வேட்டப்பட்டு கிராமம்,
திருப்பத்தூர் மாவட்டம்



பிறப்பு: 05.06.1910
இறப்பு: 20.10.2000

டாக்டர் விஆர்எஸ். சம்பத் — செல்வி இரா.சந்தானம்
ஆசிரியர், சட்டக்கதிர்
திரு. இரா. சச்சிதானந்தம் — திருமதி இரா.சம்பூர்ணம்
திருமதி இரா. சாந்தகுணம் — திருமதி இரா.சம்சாராணி
டாக்டர் அரவிந்தன் சன்மார்கம் — டாக்டர் அழகிரி சச்சிதானந்தம்

•••••

அரியலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

சபா.இராஜேந்திரன், எஸ்.அம்பேத்குமார் பங்கேற்பு!

அரியலூர், அக், 20- அரியலூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம், அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள வாணி மகாலில் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, கழக மாநில இளைஞரணி செயலாளர், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்படியும், மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் வழிகாட்டுதலின் படி, கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சு.பா.சந்திரசேகர் தலைமையில், தலைமைக் கழக பிரதிநிதிகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

நடைபெற்றக் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன், வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் ஆகியோர் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகளிடம் கழக படிவம் வழங்கி தற்பொழுது உள்ள ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்களிடம் கொடுக்கப்பட்ட படிவங்களை பூர்த்தி செய்து மாவட்ட கழகத்திடம் வழங்கிடவேண்டும், மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் புதிய கிளைகள் அமைப்பதும், அந்த கிளையில் எத்தனை நபர்கள் இருக்கவேண்டும் என கூறினர். கொடுக்கப்பட்ட படிவங்களை பூர்த்தி செய்து உடனடியாக அந்த அந்த பார்வையாளர்களிடம் வழங்கிட வேண்டும் பல ஆலோசனை கருத்துகளை எடுத்து கூறி உரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் ஜெயங்கொண்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் க.சொ.க.கண்ணன், து.அமரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெ. சக்கரவர்த்தி, கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள்,

வி.எழில்மாறன், இரா. அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன்,

நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ்.முருகன், இரா.செந்தில்குமார்,

வீர.சிவா, நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி,

பேரூர் கழக செயலாளர்கள். ப.கோபாலகிருஷ்ணன் அ.அல்போன்ஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா, பாலு, வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி, உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (18.10.2026) மாவட்ட அவைத்தலைவர் சி.நரசிம்மன் தலைமையில் தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள தலைமை கழக பிரதிநிதிகள் இ.கருணாநிதி, ப.தாயகம் கவி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். டி.எம்.கதிர் ஆனந்த் சிறப்புரையாற்றிட, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட கழகங்கள் மறுசீரமைப்பு குறித்து முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

"இவர்கள் ரசிகர்கள் அல்லர்.. ரிச்சி கேர்ள்ஸ், ரிச்சி பாய்ஸ்!"

(முனிராஜ் எலக்ட்ரிக்கல் இன்ஜினிரின் தெளிவான பார்வை!)



கொட்டும் மழையில் நனைந்தபடி விஜய்க்காகப் பாட்டுப் பாடும் பெண்களின் வீடியோவை வைத்து, "தமிழ்நாடு கெட்டுப் போச்சு, இளைஞர்கள் பாழாயிட்டாங்க" என்று பலரும் புலம்புகிறார்கள்.

உண்மை அதுவல்ல..

இது அப்பாவி இளைஞர்களின் தன்னெழுச்சியான அன்போ அல்லது தீவிர ரசிகர் கூட்டமோ கிடையாது. 'சதுரங்க வேட்டை' பாணியில் மக்களின் உளவியலை வைத்து ஆடப்படும் ஒரு மாபெரும் நவீன பிம்ப அரசியல் மோசடி!

சினிமாவில் ஒரு சீனில் கூட்டம் தேவைப்பட்டால் ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்டுகளை (துணை நடிகர்களை) கூலிக்கு வைத்து 'செட்டிங்' செய்வார்கள். அதே சினிமா ஃபார்முலாவைத்தான் இப்போது நிஜ அரசியலிலும் அப்பட்டமாகக் களமிறக்கியுள்ளனர்.

விஜய் ஒரு சினிமா பிரபலம் என்பதால், சில சினிமா இயக்குநர்கள், பி.ஆர். ஏஜென்சிகள் மற்றும் ஈவென்ட் மேனேஜ்மென்ட் குழுக்கள் இதில் தீவிரமாக இயங்குகின்றன.

முறையான கேமரா ஆங்கிள், சினிமா லைட்டிங், கூலிக்கு ஆட்கள், முன்கூட்டியே ஒத்திகை பார்க்கப்பட்ட நடிப்பு. எல்லாம் திட்டமிட்ட திரைக்கதை!

கொட்டும் மழையில் நின்று உருகி உருகிப் பாடுவது வரை எல்லாமே கூலிக்கு விற்கப்பட்ட நடிப்பு மட்டுமே. கொஞ்சம் நெஞ்சில் கைவைத்து யோசித்துப் பாருங்கள். எந்தவொரு சுயமரியாதையுள்ள தாய், தகப்பனாவது தன் மகளை இப்படி நடுரோட்டில் மழையில் நனையவிட்டு வேடிக்கை பார்ப்பார்களா?

இப்படி போலியாக 'செட்டப்' செய்து எடுக்கப்படும் காட்சிகளை, தொழில்நுட்ப வசதியைப் பயன்படுத்தி ரீல்ஸ்களாகவும் ஷார்ட்ஸ்களாகவும் சமூக வலைதளங்களில் கொட்டுகிறார்கள்.

இதை உண்மை என்று நம்பும் நம் வீட்டு அப்பாவிப் பெண்களும், பள்ளி கல்லூரிச் சிறுவர்களும் எளிதாக உளவியல் வலையில் சிக்குகிறார்கள். "நாமும் இப்படிச் செய்தால் ரீல்ஸில் வைரலாகலாம், இப்படித்தான் தலைவரைக் கொண்டாட வேண்டும்" என்கிற மாயையில் அவர்கள் உந்தப்படுகிறார்கள்.

இது ஒரு ஆபத்தான நச்சுச் சுழற்சி (Toxic Cycle); நிஜமான இளைய தலைமுறையையும் அதே தவறான பாதைக்கு இழுத்துச் செல்கிறது.

அரசியல் என்பது பொதுநலக் கொள்கை, தியாகம் மற்றும் மக்கள் சேவை சார்ந்தது. ஆனால், வெறும் சினிமா கவர்ச்சியையும் துணை நடிகைகளையும் வைத்து தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றிவிடலாம் என நினைக்கிறார்கள்.

நம் பிள்ளைகளின் வெள்ளந்தியான உணர்ச்சியையும், எதிர்காலத்தையும் வைத்து அரசியல் பிழைப்புநடத்தும் இந்த 'ஸ்கேம்' உடனே அம்பலப்படுத்தப்பட வேண்டும்!

பெற்றோர்களே, இளைஞர்களே, விழித்துக் கொள்ளுங்கள்! உங்கள் கைபேசித் திரைகளில் மின்னுவதெல்லாம் உண்மை அன்பல்ல; காசுக்கு விற்கப்பட்ட காட்சிப் பிழை!

கண் முன்னே காட்டப்படும் போலி ரீல்ஸ்களைப் புறக்கணியுங்கள்; பிம்ப அரசியலின் பின்னால் இருக்கும் ஆபத்தான நிஜத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!

நன்றி;

தோழர் புதுவை வேல்சாமி

சென்னையில் மழை வெள்ளம்:

குருட்டு வாரியர்சின் குறுக்கு புத்தி!

தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம்!

தி.மு.க. ஐ.டி. விங் விடுத்துள்ள பதிவு வருமாறு:-

சென்னையில் நேற்று கனமழை பெய்து நீர் சற்று தேங்கியவுடன், என்ன செய்வதென்றே தெரியாமல் த.வெ.க.வின் 'Virtual Abusers' படையை இறக்கி, "தி.மு.க.வின் 4000 கோடி எங்கே?" என்று சமூக வலை தளங்களில் கதறத் தொடங்கினார்கள்!

ஆனால், கழக ஆட்சியின் தொலைநோக்குப் பார்வையில் இரவு பகலாகக் கட்டப்பட்ட உயர்தர மழைநீர் வடிகால்கள் காரணமாக, சில நிமிடங்களிலேயே தண்ணீர் வடிந்து ஓடியது!

நீர் வடிந்த அடுத்த வினாடியே... "அடடா, இது எங்க அரசாங்கத்தின் சாதனை!", "களத்தில் நமது அரசு!", "த.வெ.க. பாடம் புகட்டும்!" என்று சற்றும்வெட்கமே இல்லாமல் ஸ்டிக்கர் ஒட்டத் தொடங்கிவிட்டனர்!

அரை மணி நேரத்திற்கு முன்னால் "தி.மு.க.வின் 4000 கோடி சாதனைகளில் ஒன்று" என்று ட்வீட் போட்ட அதே த.வெ.க. தற்குறி, நீர் வடிந்ததும் "களத்தில் மக்களுக்காக நமது அரசு" என்று போஸ்ட் போடுகிறான் என்றால்... இதைவிட ஒரு கேடுகெட்ட பிழைப்பு அரசியல் உலகத்திலேயே இருக்க முடியுமா?

சின்னப் பிரச்சினை என்றாலும் உடனே அடுத்தவர் மீது பழிபோடக் கத்துவதும், நல்ல விஷயம் நடந்தால் தி.மு.க. உருவாக்கிய உட்கட்டமைப்பைத் தன் கணக்கில் எழுதி 'க்ரெடிட்' திருடுவதும்தான் உங்களது 'யோக்கியமான' மாற்று அரசியலா?



இவ்வாறு கழக ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.